


உயர்திரு

# இரத்தினம் சிவலிங்கம்


அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# 31வது நாள் நினைவு மலர்

25-05-2020

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு கொக்குவிலைப்

பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# இரத்தினம் சிவலிங்கம்

( இரட்ணா மோட்டோஸ் உரிமையாளர்,

ஹிரி கட்டட ஒப்பந்தகாரர் – யாழ்ப்பாணம் ) அவர்களின்

இவ்வுலக வாழ்வின் பிரிவு குறித்த

31ம் நாள் நினைவு மலர்

# லிங்க காவியம்

# சமர்ப்பணம்

உலகத்தில்

கிடைத்தற்கரிய பெரும் செல்வம்

அனைவருக்கும் தந்தை அன்பே ஆகும்.

அதனை நிறைவாக எமக்களித்து

ஜீவிதத்தில் கல்வியோடு

பல கலையும் எமக்கூட்டி

வளமோடு நாம் வாழ வழியமைத்து

வாழ்வாங்கு வாழ்ந்து


இறைவன் திருப்பாதம் எய்திட்ட

எம் தந்தையின் பாதக்கமலத்தில்

இம்மலர் சமர்ப்பணம்.

உ

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு" [குறள்]



மண் மகிழ
23.12.1950

விண் அணைக்க
25.04.2020

அமரர்

# உயர்திரு இரத்தினம் சிவலிங்கம்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

வைத்தோர் வாழ்த்தி ஏந்தும் ஆண்டாம் சார்வரி அதனில்
சித்திரைத் திங்கள் பன்னிரெண்டாம் நாளும் வளர்பிறை
திருதியைத் திதியும் சேர் நன்னாளில் சிவலிங்கம் தந்தையிவர்
நிலையில்லா வாழ்வகற்றி நிலைத்திடு வாழ்வைத் தேடிய நாளதாமே.

# தோத்திரத்திரட்டு



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

அல்லல்போம் வல்வினை போம் அன்னை
வயிற்றில் பிறந்த தொல்லைபோம் போகாத்துயரம் போம்
நல்ல குணமதிக மாமருனை கோபுரத்துள்
வீற்றிருக்கும் கணபதியை கைதொழுதக்கால்.

## தேவாரம்

இந்திரனுக்கு அருஞ் சாபம் தீர்த்த லிங்கம்
ஏழேழு சங்கத் தமர்ந்த லிங்கம்
கந்தரத்தால் கொடு விஷத்தைக் காத்த லிங்கம்
கருக் குருவிக்குபதேசம் செய்த லிங்கம்
தந்திரத்தால் வணிகப்பெண் மாமனாகி
சபைக்கேறி வழக்குரைத்த சாட்சிலிங்கம்
சுந்தரர்க்கு தூதாகி நின்ற லிங்கம்
சொக்கலிங்கம் தனை நினைக்கில் சொர்க்கம்தானே.

## திருவாசகம்

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆளாமல் காப்பானை ஏற்றாதே
சூழ்கின்றாய் கேடுனக்கு சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ யவலக் கடலாய வெள்ளத்தே.

கொம்பரில்லாக் கொடி போல் அலமந்தனன் கோமளமே
வெம்புகின்றேனை விடுதி கண்டாய் விண்ணர் நண்ணுகில்லா
உம்பர் உள்ளாய் மன்னும் உத்தர கோச மங்கைக் கரசே
அம்பரமே, நிலனே அனல்காலொடு ஒப்பானவனே.

## திருவிசைப்பா

தத்தை யங் கனையர் தங்கள் மேல் வைத்த
தயாவை நூறாயிரங் கூறிட்டு
அத்திலங் கொரு கூறு உன் கண் வைத்தவர்க்கு
அமருலகு அழிக்கும் நின்பெருமை
பித்தனென்று ஒரு கால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கை கொண்ட சோழேச்சரத்தானே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தங்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகவென உரைப்பார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறினைப் பெரு வாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள் வாயே
உத்தமா தான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

# திருப்பள்ளியெழுச்சி
## பகவான் ஸ்ரீ சத்தியஸாயி சுப்பிரபாதம்

[ தமிழ் வடிவம் ]

1. ஈசுவராம்பா(ள்) திருமைந்தா! சத்யசாயி நாதா!
குணதிசைக் கதிரவன் எழுந்தான்; கோமகனே கண்மலராய்
பகற்போதில் தெய்வீகப் பணிகள் பலவாற்ற
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே!

2. எழுந்தருளாய் எழுந்தருளாய்! பர்த்தியின் தலைவா
பார்க்கெலாம் நாயகா! எழுந்தருள் வாய்!
அருள்நிறை வடிவே! உலகினில் மங்கலம் ஓங்கிவளரவே
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே!

3. சித்ராவதிக் கரைதன்னில் சீர்மிகுதிரு மாளிகையில்
ஆவலுடன் நிற்கின்றார் அடியார்கள் உமைக்காண
கதிரோன் தன்ஒளியால் ககனமெலாம் ஒளிரவைத்தான்
வைகறைப் பொழுதுமக்கு வளமாக மலரட்டும்!
எழுந்தரு ளாயேபள்ளி; எம்பெருமான் சத்தியசாயீஇ!

4. திருப்பெயரை மகிழ்ந்தோதும் திருத்தொண்டர் நாட்காலே
பக்தித் தேன்பருகிப் பாசுரங்கள் இசைக்கின்றார்
காட்சி கொடுத்தருளக் கருணைக்கடலே! கடிதின் கண்மலர்வீர்!
வைகறைப் பொழுதுமக்கு வளமாக மலரட்டும்;
எழுந்தரு ளாயேபள்ளி; எம்பெருமான் சத்தியசாயீஇ!

5. மணங்கவரும் தெய்வீக மணமலர்கள் கொண்டுன்றன்
மலர்போன்ற திருவடியை மனமுவந்து பூசிக்க
மலர் முகத்தார் வந்து நின்றார்
வைகறைப் பொழுதுமக்கு வளமாக மலரட்டும்
எழுந்தரு ளாயேபள்ளி; எம்பெருமான் சத்தியசாயீ நாதா!

6. பன்னாட்டு நல்லறிஞர் பாங்குடனே நிற்கின்றார்
தெய்வத் திருவடியைத் தெளிவாகத் தரிசிக்க
விருப்புற்ற மனதோடு வேதங்கள் ஓதிநின்றார்
வைகறைப் பொழுதுமக்கு வளமாக மலரட்டும்;
எழுந்தரு ளாயேபள்ளி; எம்பெருமான் சத்தியசாயீஇ!

7. திக்கெல்லாம் பரவியஉன் திருப்புகழ் தனைக்கேட்டு
அற்புதங்கள் நிறைந்ததுன் அவதார வாழ்வறிந்து
பிரசாந்தி நிலையத்தில் பேரார்வம் மிகப்பொங்க
மெய்யறிவு நாட்டத்தார் மிகநெருங்கி நிற்கின்றார்
வைகறைப் பொழுதுமக்கு வளமாக மலரட்டும்
எழுந்தரு ளாயேபள்ளி; எம்பெருமான் சத்தியசாயீஇ!

8. சீதைக்கு இணையான செந்தாமரை அனைய
தூநெஞ்சக் கற்புடையார் தூமலர் மாலைகளை
நாகாபரணா! நளினமாய்க் கையேந்தி நாமலராய் துதிக்கின்றார்
வைகறைப் பொழுதுமக்கு வளமாக மலரட்டும்
எழுந்தரு ளாயேபள்ளி; எம்பெருமான் சத்தியசாயீஇ!

9. திருப்பள்ளி எழுச்சியினைத் தினந்தோறும் படிக்கின்றார்
இம்மையும் மறுமையும் ஏற்றமிகு மெய்யறிவும்
திண்ணமாய்ப் பெற்றுத் திருவடியில் ஒளிர்ந்திடுவார்

10. மங்களம் மங்களம்! நற்குரு தேவா!
மங்களம் மங்களம்! மெய்யறி வாளா!
மங்களம் மங்களம்! பர்த்திவாழ் ஈசா!
மங்களம் மங்களம்! சத்தியசாயி நாதா!

# லிங்காஷ்டகம்

ப்ரஹ்மமுராரி ஸுராார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜந்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (01)

தேவமுனி ப்ரவார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (02)

ஸர்வஸுகந்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (03)

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (04)

குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (05)

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (06)

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (07)

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பரமபர பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (08)

சிவாய நம ஓம் சிவாய நமஹ
சிவாய நம ஓம் நமச்சிவாய
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம்
ஹர ஹர ஹர ஹர நமச்சிவாய!

## நந்திதேவர் துதி

நந்திஎம் பெருமான்தன்னை நாள்தோறும் வழிபட்டால்
புத்தியில் ஞானம் சேரும் புகழ்கல்வி தேடிவரும்
இவ்வுலக இன்பம் யாவும் இவரடி தொழ உண்டு
அவ்வுலக அருளும்கூட அவர்துதி பாட உண்டு
முற்பிறவி வினைகள் யாவும் தீயிட்ட மெழுகாகும்
நந்தியின் பார்வை பட நலங்கள் உடன்கிட்டும்!
ஈசனுக்கு எதிர் அமர்ந்து இறை ஊஞ்சல் ஆட்டுவிக்கும்
நந்தீசர் நற்பாதம் நாம் தொழுவோமே!

## நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கைலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி

செங்கரும்பு உணவுமாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர்போக்க வந்த நந்தி

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி

பிரதோக்ஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன்கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி

கும்பிட்ட பக்தர் துயர் நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக நந்தி

## சிவபெருமானைப் பிரதட்சணம் செய்யும் முறை

சிவாலயத்தில் நந்தி பெருமானிடமிருந்து புறப்பட்டு, வலப்புறமாகச் சென்று சண்டிகேசுவரரை வணங்கி, அங்கிருந்து வந்த வழியே திரும்பி வந்து, மீண்டும் வந்த வழியே திரும்பி நந்திதேவரின் கொம்புகளுக்கிடையே சிவபெருமானை வணங்கவேண்டும்.

இப்படி மூன்று முறை வணங்கும் முறைக்கு சோமசூக்த பிரதட்சணம் என்று பெயர்.

## விநாயகர் துதி

கணேச சரணம் பரம பாவனம்
சத்ய சாயினம் கஜானனம்
நித்ய ஸ்மரணம் பரம பாவனம்
சத்ய சாயினம் கஜானனம்
சத்குரு சரணம் பரம பாவனம்
சத்ய சாயினம் கஜானனம்
பவ பய ஹரணம் பரம பாவனம்
சத்ய சாயினம் கஜானனம்

## குரு

குருப் பிரம்மா குரு விஷ்ணு
குரு தேவோ மகேஸ்வரா
ஜெய தேவா குரு தேவா
ஜெய சத்குரு சாயீஸ்வரா
ஜெய் ஜெய் ஜெய் கருணாகரா
ஜெய் ஜெய் ஜெய் அகிலேஸ்வரா
ஜெய் ஜெய் ஜெய் ஜெகதீஸ்வரா
ஜெய் ஜெய் ஜெய் சாயீஸ்வரா

## சிவன்

சங்கரா சதாசிவா சந்திர சேகரா
சந்த்ர சேகரா சாயி சங்கரா
நீலகண்ட சூலதாரி சாயி சங்கரா
பால நேத்ர சூலதாரி சாயி சங்கரா

## சக்தி

ஜெனனீ ஜெனனீ சத்ய சாயி சுப ஜெனனீ
ஜெகதாரிணி பரிபூரணி சாயீஸ்வரி ஜெனனீ
சத்தியஸ்வரூபினி ஜெனனீ
சர்வ சம்ரட்ஷக ஜெனனீ
சாந்தஸ்வரூபிணி ஜெனனீ
ப்ரேமப்ராதாயினி ஜெனனீ

## முருகன்

ஹே சிவ நந்தன வேல் முருகா
பாஹி பாஹி ஹே தயா மயா
சுப்ரம்மண்யம் தயா மயா
சுப்ரம்மண்யம் க்ருபா மயா
ஹே முருகா வேல் முருகா
பாஹி பாஹி ஹே தயா மயா

## இராமர்

ஆத்ம ராமா ஆனந்த ரமணா
அச்சுதா கேசவ ஹரி நாராயணா
பவ பய ஹரணு வந்தித சரணு
ரகு குல பூஷண ராஜீவ லோசன
ஆதி நாராயண ஆனந்தசயன
சச்சி தானந்த ஸ்ரீ சத்ய நாராயண

## நாராயணன்

ஹ ராப்தி சயன நாராயணா
ஸ்ரீ லக்ஷ்மி ரமண நாராயணா
நாராயணா ஹறி நாராயணா
நாதஜன பரிபால நாராயணா
வைகுண்ட வாசா நாராயணா
வைதேஹி ரமண நாராயணா
நாராயணா ஹறி நாராயணா
நரஹறி ரூபா நாராயணா

## கிருஷ்ணர்

ஆனந்த சாகரா முரளீதரா
மீராப்பிரபு ராதே ஸ்யாம வேணு கோபாலா
நந்த யசோதா ஆனந்தகி சோரா
ஜய் ஜய் கோகுல பாலா ஜய் வேணு கோபாலா

## சாயி

தேவ தேதோத்தம தீன சம் ரட்ஷக
தேவாதி தேவா தயா மயா
சிறி சாயி தேவா க்ருபா மயா
பதிதோத்தாரா பாப விதூரா
பர்த்தி விஹாரா பரமேஸ்வரா
பஸ்மோத் பவஹறா பவ மய நாசன
ஸ்ரீ சாயி தேவா க்ருபா மயா

# நவக்கிரஹ வழிபாடு ஸ்தோத்திரம்

## 1. சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்!

**பலன் : வீட்டில் செல்வம் பெருகும்**

## 2. சந்திரன்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

**பலன் : நோயற்ற வாழ்வு பெருகும், எல்லா நலன்களும் பெருகும்.**

## 3. செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு!

**பலன் : எல்லோரும் வேண்டப்பட்டு சந்தோஷம் பெருகும்.**

## 4. புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந்த ருள்வாய் பண்ணொலி யாளனே
உதவியே யாளும் உத்தமா போற்றி!

**பலன் : நல்லவற்றைப் பெசி, நல்லறிவு பெருகும்.**

## 5. குரு

குணமிகு வியாழக் குரு பகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோஷமின்றி கடாட்சித் தருள்வாய்!

**பலன் : செல்வம் பெருகும், துன்பங்கள் மறையும்.**

### 6. சுக்கிரன்

சுக்கிர மூர்த்தி சுகம்மிக மீவாய்
வக்கிர மின்றி வரமிகுத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே!

பலன் : எல்லா நன்மைகளும் பெருகி, நவக்கிரகங்களின் அருளைப் பெறலாம்.

### 7. சனி

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்!
இச்செகம் வாழ இன்னருள் தாதா!

பலன் : கடன்கள் நீங்கி செல்வம் செழிக்கும்.

### 8. ராகு


அரவெனும் இராகு ஐயனே போற்றி
இரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியே போற்றி!

பலன் : விரோதிகள் அழிந்து எல்லா காரியங்களிலும் வெற்றி கிட்டும்.


### 9. கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரஷி

பலன் : எல்லாத் துன்பங்களும் நீங்கி சுகவாழ்வு வாழலாம்.



நீர்வேலி "கருணாலயம்"
அடிக்கல் நாட்டு விழாவின்போது....



கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
பரிசளிப்பு விழாவின்போது...



அன்னார் தனது மனைவியுடன்....



அன்னார் இளமைக் காலத்தில்
தனது பெற்றோருடன்...

உ
சிவமயம்

# திரு. இரத்தினம் சிவலிங்கம் ஜீவிதப் பதிவுகள்

ஈழமணித்திருநாட்டின் வடபுலத்தே தமிழோடும் தமிழ் பண்பாட்டோடும் சேர்ந்து புகழ்பரப்பும் எழில்மிகு கொக்குவில் பதிதன்னில் (கொக்குவில் மேற்கு) இல்வாழ்வில் வாழ்வாங்கு வாழ்ந்த இரத்தினம் அன்னம்மா தம்பதிகளின் செல்வப்புதல்வனாக அமரர் இரத்தினம் சிவலிங்கம் அவர்கள் 23-12-1950ல் இப்பூவுலகில் அவதரித்தார்.

இவர் தன் சிறுபிள்ளை பராயத்தை தன் உடன்பிறந்த சகோதரர்களான மனோன்மணி, சபாரத்தினம் மற்றும் பாக்கியலட்சுமி, புஸ்பவதி, சரஸ்வதி ஆகியோருடன் கூடி விளையாடியும், ஆனந்தமூர்த்தி, பாலசுப்பிரமணியம், சச்சிதானந்தம், சண்முகராஜா, ரவீந்திரன் ஆகியோருடன் பல குறும்புகளும், சுட்டித்தனங்களும் செய்து அனைவருக்கும் பிடித்தமான செல்லத்தம்பியாகவும், பாசமிகு அண்ணணாகவும் வளர்ந்து வந்தார்.

இவர் மெல்ல மெல்ல வளர்ந்துவந்து தனது ஆரம்ப மற்றும் உயர் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயின்று தான் கற்ற கல்விக்கு ஏற்றாற்போல் நல்லொழுக்கத்திலும், நற்பண்புகளிலும் சிறந்து விளங்கினார். அதோடு மட்டும் நின்றுவிடாமல் நற்பண்புகள் நிறைந்த பழைய மாணவனாக இருந்து தான் கற்ற கல்லூரிக்கும் தான் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்க்க அருகில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், வர்த்தக சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றில் தலைவராகவும், செயலாளராகவும் பொருளாளராகவும், அங்கத்தவராகவும், பன்முகங்கொண்டவராக தன் கடமைகளைத் தன்னகத்தே கொண்டு ஊர் போற்றும் உத்தமனாக வாழ்ந்த இவர் "சிவா" என்றும், சிவலிங்கம் என்றும் அன்பாக அழைக்கப்பெற்றார்.

சமாதான நீதவானாகவும், ரட்ணா மோட்டோஸ் நிறுவனத்தின் உரிமையாளராகவும், ஹறி கட்டட ஒப்பந்தக்கார நிறுவனத்தின் உரிமையாளராகவும், தனது அன்பான பேச்சாலும் நல்லொழுக்கத்தாலும் அனைவரின் மனதிலும் இடம்பிடித்து வர்த்தகத்துறையில் தனக்கென தனி முத்திரை பதித்தார். அதோடு மட்டும் நின்று விடாமல் உலகம் போற்றும் விவசாயத்துறையிலும் கால்பதித்து தனது கடின உழைப்பும், முயற்சியும் ஒன்றுசேர தன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி உழைப்பாலே உயர்வு கண்டார்.

இவ்வாறாக மெல்ல மெல்ல வளர்ந்து பெரியவனானதும் வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளான இரத்தினேஸ்வரியை கரம்பிடித்தார். இல்லற வாழ்வின் நல்லறமாக இனிதாய்ப்பெற்ற கவிதா, பிருந்தா, ஜீவனா, மனோஜிதன் நால்வருக்கும் அன்பையும், நற்பண்புகளையும் ஊட்டி வளர்த்தார். கல்வியே கண் என காட்டி கண்ணின் மணிபோல பாதுகாத்து வளர்த்தார்.

காலம் சுழலும் வேகத்திற்கேற்ப தன் கடமைகள் யாவையும் சரிவரச்செய்தவர் தன் முத்தான மூன்று பெண் குழந்தைகளுக்கும் நல்லொழுக்க சீலர்களான தினேஸ்குமரன், தர்மசீலன், விஸ்ணுவர்த்தனன் ஆகியோரை மணம் முடித்துக்கொடுத்து தன் மனைவியுடன் சேர்ந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்.

பேரக்குழந்தைகளான யக்சாயி, சாயிஷா, நவியா, நிவியா, சகானா, ராகவி ஆகியோருடன் கூடி விளையாடி, செல்லக்கதை பேசி, கொஞ்சிக்குலாவி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

இவ்வாறாக வாழ்ந்த இவர் அன்பிலும், அறிவிலும், ஈகைக் குணத்திலும், மற்றோரை மதிக்கும் பண்பிலும் உயர்ந்து நின்றார். எத்தனை உயரங்கள் கண்டபோதிலும் தன்னிலை மாறாமல் வாழ்ந்துவந்தார்.

இவ்வாறாக மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என சந்தோசமாக வாழ்ந்த இவர், கடைக்குட்டி மகனாகிய மனோஜிதன் அவர்கள் கல்வியில் சிறப்புற்று நற்குண இயல்புடைய மகனாக வாழ்தல் கண்டு மகிழ்ந்திருந்தார். அவருக்கும் நல்வாழ்வு அமைய பிரார்தித்து இருக்கும் வேளை இல்வாழ்வு இனிதே வாழ்ந்து உன் கடமைகள் யாவும் நிறைவுற்றது மைந்தா என் பாதக் கமலத்தில் பணியாற்றவென்று உனை அழைக்கிறேன் என இறைசித்தம் அமைந்தது கண்டீர்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

# மனைவி புலம்பல்

என் மருமார்பில்
மாங்கள நாண் தனைப்பூட்டி
வாழ்க்கைத்துணையாய்
கரம் பிடித்த அன்நாள்போல்
எந்நாளும் இனித்திருந்தோம்
கலையாத செல்வங்கள்
அத்தனையும் நிறைவாகப்
பெற்றே மகிழ்ந்திருந்தோம்
கள்ளம் கபடமற்ற உள்ளம் படைத்த
உன் புன் சிரிப்பால் எமை அரவணைத்த
வித்தக நாயகரே
பிள்ளைகள் மருமக்கள்
பேரக் குழந்தைகளுடன்
இன்புற்ற வாழ்வு போதுமென்று
எமைத் தவிக்க விட்டு
இறைவன் திருப்பாதம் விரைந்ததேனோ!!!

– இரத்தினேஸ்வரி

# பெண் பிள்ளைகள் மனதில்

என்றும் அணையாத ஒளி எமதப்பா
தினம் தினம் எமை அரவணைக்கும்
கலையாத புன்முறுவல் நீங்களப்பா
வளமோடு வையமதில் நாம் வாழ
வழி சொல்லும் கவினுறு வார்த்தைகள்
அதனுள் அடங்குமப்பா – கோடி அர்த்தம்
தெய்வத்தின் சாயல் அப்பா உன் திருவதனம்
என்றும் நாம் வாடிடாது வழி சொன்ன
கட்டுழைப்பின் சிகரம் நீங்கள் அப்பா
எம்
ஜீவதத்தின் விடியலின் விளக்காய்
திகழ்ந்தவர் நீங்கள் அப்பா
மெய் வருந்தி எம் அம்மா கரம் கோர்த்து
உந்தன் கடின உழைப்பால்
வையமதில் உயர்ந்தே நாம் வாழ
வழிகள் பல சொன்ன வித்தகர்
நீங்கள் அப்பா
ஓடும் காலம் அது ஓடும் என முற்றும்
உணர்ந்து தரிப்பிடம் அறிந்த
முதல்வன் எம் அப்பா முப்பெரும் மங்கையர்
நாமென மணமேடை தானிருத்தி
வரன் அமைத்த நாயகன் - நீங்கள் அப்பா
பேரக் குழந்தைகள் உன் மடியில்
புகழாங்கிதம் கொள்ளும் நாளில்
சொல்லமால் கொள்ளாமல்
காலன் காலடி சரண் புகுந்தால்
எம் அப்பா எனும் போது
எம்
ஜீவதத்தின் நாயகன் - அப்பாவை
இறைவா
உன் பாதக்கமலமதில் ஏற்று விடு
இல்லையெனில்
மீண்டும் எம்மிடமே தந்து விடு
அகமகிழ்ந்தே அரவணைப்போம்.

**– கவிதா, பிருந்தா, ஜீவனா**

# மகனின் துயரம்

இனிய பூபாளம் இசைத்திடும்
என் குடும்பத்தில்
அக்காமார் மூவருக்குமே
செப்பரிய கல்விச் சிறப்போடும்
சீர் போற்றும் இல்வாழ்வின்
வாழ் வழியமைத்தீர்
அன்புடை என் தந்தையே
இன்முகம் காட்டி எனை
இன்சொல்லால் அழைத்தமையும்
சிந்து மொழியில் எனைச் சிரிக்க
வைத்த வார்த்தைகளும்
மனத்திரையில் வந்து வந்து
போகுது என் அப்பாவே
காலத்தின் கோலத்தால்
உமைப்பிரிந்து வாழ இறைவன்
வழியமைத்ததை எண்ணி
நான் வாடுகின்றேன்
என் வாழ்வு சிறப்புறவே
ஏணியாய் நீர் இருந்து
அருள் புரிவீர் என் ஆசை அப்பாவே.

**– மனோஜிதன்**

# மருமக்கள் பிரலாபம்

மண வாழ்வில் இன்பறவே
வாழ்க்கைத்துணையாக
மருமக்களாய் வாழ்வுற்ற — நாள் முதலாய்
கபடமில்லாக் கருணையும்
இனிதான இன் சொல்வார்த்தையும்
தூய நல் துணையென
துயரம் எமை அணுகாது
ஆற்றிட்ட செப்பரிய செயல்கள்
மனதினில் வந்து வாட்டுது
எம் அருமை மாமாவே
இப்பிறப்பினில் யாம் பெற்ற பாக்கியம்
யார் பெறுவார் வையமதில்
எம்
நல் வாழ்வின் நாடித்துடிப்பறிந்து
உங்கள்
சொல்லும் செயலும் புதிய விடியலின்
உத்வேகம் தந்திடும்
நர்த்தக வித்தக வரம் மாமா
எமை
போற்றியே பூசித்த உமை
மரணத்தில் ஆற்றிடாது
வாடுகின்றோம் - எம்
வாழும் நாள் வரையில்
உங்கள் நினைவுகளோடு
இறைவன் திருப்பாதம்
இறைஞ்சி நிற்போம்.

– தினேஸ்குமரன், தர்மசீலன், விஷ்ணுவர்த்தனன்

# பேரப்பிள்ளைகளின் ஏக்கம்

தாத்தா எங்கள் விருட்சம்
தாத்தா எங்கள் தலைவன்
தாத்தா எங்கள் சேவகன்
தாத்தா எமை அரவணைக்கும்
அன்பின் இருப்பிடம் - எமை
சிரித்தே சீராட்டி குதூகலித்திடும்
எங்கள் தாத்தா
உங்கள் மடிமீது சாய்ந்த
இனிய கதை கேட்டதெல்லாம்
கனவாகிப் போனதுவே
ஒப்பரிய கல்வியில் உயர்வுபெற
எப்போதும் துணையான தாத்தாவே
விம்மி விம்மி வழி மீது வழிகலங்க
எமை - ஏங்க வைத்து
காலன் காலடி கலந்ததேனோ
கல்வியில் நாம் உயர்ந்ததே
உங்கள் மனம் மகிழ
சேவை செய்ய எண்ணி நாம்
இன்புற்ற வேளை
கணப்பொழுதில் - சடுதியாய் சென்றதேனோ
எம் தாத்தாவே காலமெல்லாம் காத்திருப்போம்
ஏற்றமுடன் நாம் வாழ
வழி சொல்லுதற்காய்

**– யக்சாயி, சாயிஷா, நவியா, நிவியா**
**ஷகானா, ராகவி**

# அன்பான என் தம்பியே

எனைக் கட்டிய கணவன்
துணை இழந்து நட்டாற்றில்
தவித்து நான் நின்றவேளை
என் நினைவுகள் இனித்திட
கூடியே பிறந்திட்ட - நானிலம்
போற்றிடும் - ஆருயிர்த் தம்பியே
என்
ஊழி நாள் வரையில்
துணையாக நீயிருந்து உதவிடுவாய் என
நான் மகிழ்ந்திட்ட வேளைதனில்
சடுதியாய் உந்தன் ஆவி - அடங்கிய
அவல நிலை எனை வாட்டுதையா
எப்போது சாந்திபெற - என்னிடத்தில்
உயிர் மூச்சாய் கலந்திடுவாய்
எண்ணிய தம்பியே அதுவரையில்
காத்திருப்பேன் உந்தனுக்காய்

**– சகோதரி புஸ்பவதி**

# உந்தன் நினைவுகளுடன்

அந்தி வானம் அமைதியாய்
உறவுகள் எல்லாம்
உறக்கத்தில் கனவுகளாய்
உந்தன் நினைவுகள்
வந்து வந்து மறைந்ததே
எங்கள் ஆருயிர் - சகோதரா
மரணித்து விட்டதாய்
என்கின்ற அவலச் செய்தி
புயலிலும் வேகமாய்
புதிய விடியலில் எமை வாட்டிட
வாடி நாம் விம்மி விம்மி — மெய்மறந்து
ஆற்றிட முடியாது அழுது நாம் புலம்பிட
ஆழாத்துயர் எமக்களித்த
அழகுருவே அன்பே எம் உடன்பிறப்பே
இனி எங்கும் நாம் தேடிக் காண்போம்
உன் திருவதனம் - அதுவரையில்
இறைவன் திருப்பாதம் இறைஞ்சுவோம்
உந்தன் நினைவுகளுடன்

**– சகோதரர்கள்**

# உறவினர் அனுதாபம்

நாடி நம் இல்லங்கள் தோறும் வந்து
உறவென்று எம் நலம்
எம் பெற்றோருக்கு இணையாத
தம் பிள்ளைகள் போல் எங்களையும்
அரவணைத்து எங்களின் வளமான வாழ்வுக்கு
உதவுகின்ற பண்புடைய இதயதெய்வம்
எமை தவிக்க விட்டு சிவன் திருவடி
எய்திட்டார் என எண்ணும் போது
மனம் வருந்தி நிற்பதோடு மறுபிறப்பு
ஒன்றிருந்தால் மீண்டும் எம் உறவாய்
வந்து விடும் பாசக்கரம் நீட்டி நாம்
மகிழ இறைவனை இறஞ்சுகின்றோம்.

**– உறவினர்**

# உனதன்பைத் தேடி

நான் என்ற வாழ்வதனை மறைந்தே
நாமாக வாழ்ந்திட்ட எம் அருமை - மாமாவே
எனதம்மா வாழ்வியலில் உங்கள்
சேவையின் மகத்துவத்தை
ஊட்டியெமை வளர்த்த கதை
எம்
ஜீவிதத்தில் பதிந்த வேளைதனில்
உம்மோடு இனித்தே இன்புறவே
எண்ணி நாம் மகிழ்ந்த வேளை
இவ்வுலக வாழ்வதனை - முடித்தே
விண்ணுலகம் சென்ற செய்தி
வீசும் தென்றல் புயலாகி
இடியாகி எம் காதோரம்
கலந்திடவே
கனக்கின்ற இதயமதின்
சுமையோடு தவிக்கின்றோம்
எப்பிறப்பில் உமை காண்போம்
என் அருமை மாமாவே
ஜீவிதத்தில் பாசக் கரம் நீட்டி
எமைக் காத்த மாமாவே
மரணத்தில் உன் பிரிவைத் தாங்காது
தவிக்கின்றோம் எமைத் தேற்றிட
வழியொன்று எமக்கருள்வாய் - மாமாவே!

– மருமகள் விஜயா

# மாமாவே உந்தன் உயிர்நாடி

பெற்றெடுத்த உன் பிள்ளைகள் போல்
பேணி எமை அரவணைத்தே
பிரியமுடன் வையமதில்
மேன்மையுடன் நாம் வாழ்ந்திடவே
வழிகள் பல சொல்லி பாங்குடனே
எமை வளர்த்த மாமாவே
துடுப்பிளந்து நடுக்கடலில்
தத்தளிக்கும் தெப்பமானோம்
தவிக்கின்றோம் உனதன்பின்
இறைக்கைக்குள் இளைப்பாறும்
நாள் எப்போது வரும் எம்வாழ்வு
மகிழ்வுறவே - அதுவரையில்
உங்கள் நினைவுகளோடு
இறைவன் திருப்பாதம் இறைஞ்சி நிற்கும்

**– மருமகன் பரமேஸ்வரன்**

# மறக்கமுடியாத மாணவன்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைந்தனான சிவலிங்கம் அவர்கள் தனது கல்லூரி நாட்களில் கல்வியிலும் பண்பாட்டு கலை நிகழ்ச்சிகள் நடாத்துவதிலும் தலைசிறந்த மாணவனாக இருந்தார் என்பதில் ஐயமேதுமில்லை. குறிப்பாக இராணிச் சாரணன் விருது பெறுவதற்காக சிவலிங்கம் செய்த கடின உழைப்பு இன்னமும் என் மனதில் இருக்கின்றது. இலங்கையில் ஒரே வருடத்தில் கூடிய இராணிச் சாரணர்களை உருவாக்கி வரலாற்றுச்சாதனை படைத்த சாரணர் குழு என்ற பெருமையை பெறுவதற்கு காரண மானவர்களில் குறிப்பிடத்தக்கவர் சிவலிங்கம். உண்மையை உரத்துக்கூறும் வலிமை படைத்தவர். அன்பும் அடக்கமும் அறிவும் ஆற்றலுமிக்க மாணவன் தான் சிவலிங்கம் என்று பெயர் பெற்றார். உயர் கல்வி பெறும் தகுதியும் திறமையும் வாய்ப்பும் இருந்தும் இளவயதில் வணிகத்துறையில் ஈடுபட்டார். வணிகத்துறையில் தனித்துவம் பெற்று பெருமதிப்பும் பெற்றார்.

இறைபக்திமிக்கவராகத் திகழ்ந்தார். சமூகநலச் செயற்பாடுகளில் தன்னலமற்று ஈடுபட்டார். இதனால் எம்மவர் மத்தியில் நல்லவர் என்று புகழப்பட்டார். இவ்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றில் நின்ற துணை என்னும் சான்றோர் வாக்கிற்கு இலக்கணமானார். இவரது குடும்பம் நல்லதொரு பல்கலைக்கழகம். அன்பான மனைவி, அறிவிற்சிறந்த பிள்ளைகள் என்பன பெற்றுத் திகழ்ந்தவர் இறைவனடி சேர்ந்து விட்டார் என்ற செய்தியை முதலில் நான் நம்பவில்லை.... கொக்குவில் இந்துவின் தவப்புதல்வன் மறைந்து விட்டானே என மனது கலங்குகின்றது.

**இ. மகேந்திரன்**

ஓய்வுநிலை அதிபர் - கொக்குவில் இந்துக்கல்லூரி.

# ஒரு சேவையாளன்

சீரும் சிறப்புமாக வணிகத்தில் ஈடுபட்டிருந்த ஒரு குடும்பத்தில் கடைசி மகனாக பிறந்தவர் அமரர் சிவலிங்கம் அவர்கள் அவரின் தந்தையார் அமரர் இரத்தினம் அவர்கள் பிரபல வணிகர். கால்பந்தாட்ட இரசிகன். என்ன வேலையிலிருந்தாலும் அதனை ஒதுக்கி விட்டு கால்பந்தாட்டப் போட்டி என்றால் சென்று விடுவார்

அவரைப்போல் தான் அவரது பிள்கைளும் விளையாட்டுத்துறையில் ஊக்கமுள்ளவர்கள். அமரர் சிவலிங்கமும் அவரது சகோதரர்களைப் போல் கல்வியில் சிறந்து விளங்கியவர். அப்படியிருந்தும் அவர்கள் அனைவரும் வணிகத்தையே தொழிலாக விரும்பி தேர்ந்தெடுத்துள்ளனர். சிறப்பாகவும் தொழிற்பட்டுள்ளனர்.

அமரர். சிவலிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரியில்தான் தனது கல்வியைத் தொடர்ந்தவர். கல்வி கற்ற காலத்தில் அவர் கல்வித்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் மிகுந்த ஈடுபாடுடையவராகக் காணப்பட்டார்.

அமரர் அவர்கள் கல்வி கற்ற காலத்தில் கல்லூரிக் கழகங்கள், சங்கங்கள் ஆகியவற்றில் பதவிகளை வகித்து வருங்காலத்தில் ஒரு சமூக ஆர்வலராக வருதற்கான அத்திவாரத்தினை இட்டவர். இங்கு பெற்ற அனுபவங்களைத்தான் பிற்காலங்களில் அவரைப் பல சமூக சேவைகளில் ஈடுபட வைத்ததென்று நம்ப வேண்டியுள்ளது.

கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள முருகமூர்த்தி கோவிலின் தர்மகர்த்தா சபையின் தலைவராக பல காலம் செயற்பட்டு அவ் ஆலயத்தின் திருப்பணிகளை பலரும் பாராட்டும் படி நகர்த்தியவர். ஆலயத்தொண்டுடன் நிற்காது சமூகத் தொண்டிலும் அதிக ஈடுபாடு காட்டியவர். கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின் நிர்வாக சபை உறுப்பினராக பல காலம் சேவையாற்றி அந்நிலையத்தினை பல படிகள் உயர்த்தியதில் அமரருக்கும் பெரும் பங்குண்டு.

அது மட்டுமல்ல தான் கல்வி கற்ற கல்லூரி மேலும் மேம்பட வேண்டு மென்று நன்நோக்கில் அதன் பழைய மாணவர் சங்க நிர்வாக சபையிலும் அங்கம் வகித்து தனது உழைப்பையும் வழங்கியுள்ளார். எந்த ஒரு கூட்டமாயினும் துணிந்து எழுந்து நின்று தன் கருத்துக்களை கூறத் தயங்காதவர்.

அவரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அ. பஞ்சலிங்கம்**

**முன்னாள் அதிபர் – யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.**

## எமது பார்வையில்
## அமரர் இ. சிவலிங்கம் J.P அவர்கள்

எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவராகத் திகழ்ந்த திரு.இ.சிவலிங்கம் J.P அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலைக்குள்ளானோம்.

அன்னார் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் கொக்குவில் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் கொக்குவில் தாவடி வேம்படி முருகன் ஆலய தர்மகர்த்தா சபைத்தலைவராகவும் இருந்து தனது வாழ்நாளில் பெரும்பகுதியை சமய, சமூகப் பணிகளுக்காக அர்ப்பணித்துள்ளார்.

அன்னார் சனசமூக நிலையத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் குறிப்பாக முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்து நிகழ்வு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்குவார்.

அன்னாரைப் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**செ. சண்முகசுந்தரம்** J.P
செயலாளர்,
கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்.
"சுப்பிரமணியம் மாலதி" ஆரம்ப சுகாதார பராமரிப்பு முன்பள்ளி
கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம்.

# திரு. இரத்தினம் சிவலிங்கம்

கொக்குவில் மேற்கில் கௌரவமான வசதியான குடும்பத்தில் பிறந்த திரு.இரத்தினம் சிவலிங்கம் தலைசிறந்த நற்பண்புகளைக் கொண்டவர். மற்றவர்களின் நலனில் அக்கறை கொண்ட திரு. சிவலிங்கம் தன்னாலான அனைத்து உதவிகளையும் மற்றவர்களுக்கு செய்து கொடுப்பதில் மிகவும் மனநிறைவடைவார். கடவுள் மேல் அதீத பக்தி கொண்ட திரு.சிவலிங்கம் அவர்கள் கொக்குவில் மேற்கு வேம்படி முருகமூர்த்தி கோவில் தலைவராக இருந்த காலத்தில் கோவிலை மிக செழிப்புற வழிநடாத்தியிருந்தார்.

மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டுமென்ற உன்னத நோக்கம் கொண்ட இவர் சமாதான நீதவானாகவும், நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் கொக்குவில் மேற்கு கிளை 12இன் தலைவராகவும், கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும், நல்லூர் பிரிவு கொக்குவில் மேற்கு சித்திவிநாயகர் சம்மேளனப் பொருளாளராகவும் இன்னும் பல பொதுச்சேவைகளில் இருந்தும் தான் இறக்கும்வரை அளப்பரிய சேவைகளைச் செய்தும் இறைவனடி சேர்ந்த திரு. இரத்தினம் சிவலிங்கம் மீண்டும் பிறப்பிருந்தால் மீண்டும் பிறந்து வந்து மேலும் பல சேவைகளை மக்களுக்குச் செய்ய வேண்டும் என்று உறவினன் என்ற முறையில் உரித்துடன் கேட்கின்றேன்.

**திரு. செல்வம்**
நந்தினி பேக்கறி.

# கண்ணீர் அஞ்சலி

**பிறப்பு 23.12.1952 இறப்பு 26.04.2020**



எமது பாடசாலை ஆசிரியை

**ஜீவனா விஷ்ணுவர்த்தன்**

அவர்களின் தந்தையார்

## திரு. இரட்ணம் சிவலிங்கம்

அவர்கள்

இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன்
அவரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்
கொள்கின்றோம்.

(C-6536)

**யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன்
வித்தியாலய சமூகம்**

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
23 - 12 - 1950

இறப்பு
25 - 04 - 2020

## அமரர் இரத்தினம் சிவலிங்கம்

(முன்னாள் செயலாளர் - பழைய மாணவர் சங்கம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

அறிவு பரப்புஞ்சாலை அரிய பாடசாலை கொக்குவில் தந்த இந்து ஆரம்ப பாடசாலையின் பல்துறை வளர்ச்சிக்கு நீண்ட காலமாக பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக இருந்து தன்னை முழுமையாக அர்ப்பணித்த அமரர் இரத்தினம் சிவலிங்கம் அவர்களின் பிரிவுத் துயர் செய்தி கேட்டு பாடசாலை சமூகம் மிகுந்த துயரம் கொள்கின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டிக் கொள்கின்றோம்.

யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
மற்றும் பழைய மாணவர் சங்கம், கொக்குவில்.

ANT

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 23 | 25 |
| 12 | 04 |
| 1950 | 2020 |

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின்
நிர்வாக சபை உறுப்பினராக இருந்த

## அமரர் திரு. இரத்தினம் சிவலிங்கம் J.P

அவர்கள்

**காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம்
இவர் கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச்சங்கத்தின்
தலைவராகவும், கொக்குவில் தாவடி, வேம்படி முருகன்
ஆலய தர்மகர்த்தா சபையின் தலைவராகவும் இருந்து சமய,
சமூகப்பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு தொண்டாற்றி
வந்தார். இவரது மறைவு எமது கிராமத்துக்குப் பேரிழப்பாகும்.**


அன்னாரைப் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்
"சுப்பிரமணியம் மாலதி" ஆரம்பசுகாதார பராமரிப்பு முன்பள்ளி,
கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம்.**

Print@Andra Printers, Jaffna.

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு : 23.12.1950 இறப்பு : 25.04.2020

## அமரர் இரத்தினம் சிவலிங்கம் J.P

### உரிமையாளர் – இரத்தினா மோட்டோர்ஸ்

முன்னைநாள் தலைவர், செயலாளர், பொருளாளர் –
( வேம்படி முருக மூர்த்தி கோவில் ),
முன்னைநாள் செயலாளர் ( கொக்குவில் இந்து ஆ. பா )
முன்னைநாள் தலைவர் ( கிராம முன்னேற்ற சங்கம்
கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம் ).

இல்லறம் சிறக்க இடைவிடாமல் உழைத்த உத்தமரே !
ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவு கொண்டு
மாவிட உறவுகளின் வலிமைக்கு வேரென இருந்தீரே !

விதியை அருவியாக்கி வலியை மொழியாக்கி
உதவுங்கரங்களால் உதவியளித்த உத்தமரே !
வாழ்வையே சுமையாக்கி வாழ்ந்து சென்றதேனோ !

கோயில்களில் பக்தியுடன் பாமாலைகள் பாடினீரே !
பள்ளிகளில் வளர்ச்சிக்கு பங்களித்து வாழ்ந்தீரே !
கொக்குவில்பதியில் பார்புகழ் மைந்தனாக வாழ்ந்தீரே !

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ. சந்திரன் குடும்பம்.

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
23
12
1950



விண்ணில்
25
04
2020

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின்
நிர்வாக சபை உறுப்பினரான

## அமரர் திரு. இரத்தினம் சிவலிங்கம் J.P

அவர்கள்

கொக்குவில் மக்களுக்கு அளப்பரிய சேவை ஆற்றினீரே!
கொக்குவில் மேற்கு வேம்படி முருகமூர்த்தி, மஞ்சவனப்பதி கோவிலுக்கு
இன்னோரன்ன பல சேவைகளை ஆற்றினீரே!
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் ஆரம்பப் பாடசாலைகளுக்கு
பல ஆண்டுகளாக பாரிய பணி ஆற்றினீரே!
இவ்வாறு பல்வகையான சமூகப்பணிகளை ஆற்றுவதே தனது
தலையாய கடமையாக செயற்பட்டு வாழ்ந்த உத்தமரே!
நீர் எம்மை விட்டு அகன்றாலும் உம் நினைவுகளும் உமது பணிகளும்
என்றென்றும் எங்கள் மனதில் நிலைத்து நிற்கும்.

தாங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கனகசபை தளையசிங்கம்
குடும்பத்தினர்
கோண்டாவில்

Print@Andra Printers, Jaffna.

# வாழ்வை வளமாக்கும் நெறிமுறைகள்

முக்கியமான சில நெறிகளை நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையலாம். ஆன்மீக உயர்வையும் பெறலாம். இவை எல்லாமே நாம் எளிதாகக் கடைப்பிடிக்கக் கூடியவைதாம். உடல் நலம் காப்பதற்கு அளவாக உண்ணுங்கள். இறைவனுக்குப் படைத்தது அதைப் பிரசாதமாக உண்ணுங்கள். சாத்வீகமான உணவை உட்கொள்ளுங்கள். பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை உண்ணா விரதத்தைக் கடைப்பிடியுங்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் நான்கு மணிநேரத்திற்கு குறையாமல் மௌன விரதத்தைக் கடைப்பிடியுங்கள்.

பண்புகளைக் காப்பாற்றுங்கள் - மென்மையாகப் பேசுங்கள், கூடியவரை உண்மையே பேசுங்கள், கோபப்படாமல் பேசுங்கள்.

அக எண்ணங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். செயலில் நேர்மையைக் காட்டுங்கள். நியாயமற்ற செயல்களில் ஈடுபடாதீர்கள். தவறு செய்பவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள்.

வைராக்கியத்தை வளருங்கள். வாரம் ஒருமுறை உப்பைக் கைவிடுங்கள். மாதம் ஒரு வாரம் சர்க்கரையைக் கைவிடுங்கள். மனதைக் கெடுக்கும் பொழுது போக்குகளில் ஈடுபடாதீர்கள். உங்கள் தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். உணவு, உடை, பழக்கவழக்கங்கள் எல்லாவற்றிலும் எளிமையைக் கடைப்பிடியுங்கள்.

இதயத்தைத் தூய்மைப்படுத்துங்கள். பிறருக்கு நன்மை செய்யும் எண்ணங்களை வளருங்கள். அன்பே தெய்வம் என்று உணருங்கள். வேலையைக் கடமை உணர்வுடன் செய்யுங்கள். பிரதிபலன் எதிர்பாராமல் கடமையைச் செய்யுங்கள். அடக்கத்துடனும், பணிவுடனும் செயற்படுங்கள். இவை உங்கள் இதயத்தைத் தூய்மைப்படுத்தும். இறைவனை எல்லா உயிரிடத்தும் உணருங்கள். எல்லா உயிர்களிடத்தும் அன்புநேய உண்மையான பக்தி.

நல்லுணர்வுகளை வளர்த்தல், தினமும் ஒரு மணிநேரம் நல்ல ஆன்மீக விஷயங்களை நிறைந்த நற்போதனைகளையும, நூல்களையும் படியுங்கள். நல்லொழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கும் பிரசங்களில் கலந்து கொள்ளுங்கள்.

மனதைத் தூய்மைப்படுத்தி நல்லுணர்வுகளைக் கொடுக்கக் கூடிய பூஜை. கூட்டு வழிபாடு, பஜனை ஆகியவற்றில் ஈடுபடும் பெரியோர்கள் உறவை நாடி அவர்களின் போதனைகளைப் பெறுங்கள்.

ஆன்மீகச் செழுமையைப் பெறுவது தினமும் விடியற்காலை நான்கு மணிக்கே எழுந்து நீராடுங்கள். அதன் பின் தியானத்தில் அமருங்கள். ஜபம் இறைவனது நாமஸ்மரனை ஆகியவற்றில் மனதை ஈடுபடுத்துங்கள். இறைவனின் பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். மீண்டும் மீண்டும் எழுதிப் பழகுங்கள். இறைவனைப் பூஜிக்கும் பாடல்களைக் கேளுங்கள். முடிந்தால் நீங்களே பாடுங்கள்.

இந்த வழிகளைக் கடைப்பிடித்தால் உடலும் உள்ளமும் தூய்மைபெறும். ஆன்மீக மார்க்கத்தில் முன்னேற வழி கிடைக்கும்.

– சுவாமி சிவானந்தர்.

## கடமை உணர்வினையும் சேவை மனப்பான்மையினையும் வளர்ப்பது எப்படி

கடமைபுரியும் நாள் முழுவதையும் மனஉறுதியுடனும், புதுத் தெம்புடனும் வைத்திருத்தல் மிக அவசியம். இப்படிப்பட்ட மனஉறுதியையும், மனத்தென்பையும் நீங்களே உருவாக்கிக் கொள்ளலாம். இத்தகைய மனப்பயிற்சிக்கு காலை நேரமே மிக உகந்தது.

காலையில் நித்திரை விட்டு எழுந்த முதல் பத்து நிமிடங்களையும் "உச்ச சாதனக் காலம்" என்று கூறுவார்கள். இம் மங்களகரமான பொன்னான காலத்தில் வெற்றி மனப்பான்மைச் சிந்தனைகள் மட்டுமே மனதில் உதித்திடல் வேண்டும். எண்ணியவற்றை எண்ணியவாறு எய்திடும் சக்தியைத் தரவல்ல காலம் இது. நினைத்த காரியம் யாவும் நினைத்தவாறே நடைபெறவல்ல சக்தியைத் தந்திடும் காலம் இது.

ஆகவே, நாள் முழுவதையும் உச்ச பயனுள்ள நாளாகப் பயன்படுத்துவதற்கு சில மனப்பயிற்சிச் சபதங்கள் இந்நன்நேரத்தில் எடுத்திடல் வேண்டும். இந்நேரத்தில் எடுக்கப்படும் மனப்பயிற்சிச் சபதங்கள் உங்கள் மனதில் ஆழப்பதிந்து நாள் முழுவதும் மன உறுதியையும், மனவல்லமையையும் தரவல்ல உயர் உந்து சக்தியாக மாறிவிடுகின்றது.

நீங்கள் எல்லோருக்கும் தினமும் காலையில் எழுந்தவுடன் பின்வரும் மனவுறுதிச் சபதத்தினை எடுத்திடல் வேண்டும்.

இன்று இனிய நாள்

இன்று நான் நன்றாகக் கடமை ஆற்றுவேன்.

இன்று நான் நல்ல திறமைசாலியாக விளங்குவேன்.

இன்று எல்லோருக்கும் நான் நல்மதிப்புக் கொடுப்பேன்.

இன்று எனது கடமைகளைக் கண்ணியத்துடனும், கட்டுப்பாடுடனும், கடமை உணர்வுடனும் ஆற்றுவேன்.

உறுதியும், உற்சாகமும் என் நெஞ்சில் இன்று நன்றாக ஊற்றெடுக்கும். நான் இன்று மனமகிழ்வுடனும், மனத்தெம்புடனும் பணி ஆற்றுவேன். நான் இன்று வெற்றி, வீரம், சித்தி, சிறப்பு ஆகியவைகளை அடைவேன். மற்றோருக்கு உதவிசெய்து உயர்வடைவதே எனது இன்றைய குறிக்கோள் இன்று நானும் உயர்வேன், எல்லோரும் உயரும் வண்ணம் அவர்களையும் ஊக்குவிப்பேன்.

1. நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி நின்று எடுக்கவேண்டிய சபதம் இதுதான்.
2. இன்று நாங்கள் நன்றாகக் கடமை ஆற்றுவோம்.
3. இன்று எங்கள் மத்தியில் உறுதியும், உற்சாகமும், மனத்தெம்பும் ஏற்படும்.
4. இன்று நாங்கள் எல்லாரும் மனச்சந்தோசத்துடன் கடமை ஆற்றுவோம்.
5. இன்று எங்களுடைய முழுத்திறமையும், திறனும் பரிணமிக்கும்.
6. இன்று நலம்தரும் வெற்றி எண்ணங்களை மட்டுமே நாம் சிந்திப்போம். நலம்தரும் விடயங்கள் பற்றியே உரையாடுவோம்.
7. இன்றே செய்வோம். அதனை நன்றே செய்வோம் என்று கோதாவில் இன்றைய கருமங்களை இன்றே செய்து முடித்து விடுவோம்.
8. "முடியாது", "இயலாது", "தெரியாது" என்று சொற்களைப் பிரயோகிக்காது "முடியும்", "முயற்சிப்போம்", "தெரியும்", "இலகுவானது", "சுலபமானது" ஆகிய வெற்றிதரும் வாக்கியங்களை மட்டும் இன்று பாவிப்போம்.

வெற்றி எண்ணங்களை வளர்ப்பது எப்படி?

தோல்வி எண்ணங்களை மறப்பது எப்படி?

1. வெற்றி எண்ணங்கள் வெற்றியைத் தரும்.
2. தோல்வி எண்ணங்கள் தோல்வியைத் தரும்.
3. நான் எல்லாக் கருமங்களிலும் "வெற்றி அடைவேன்" "சித்தி பெறுவேன்", "சிறப்படைவேன்", "உயர்வடைவேன்", "உன்னதசேவையாற்றுவேன்" என்று எண்ணி வெற்றி மனப்பாங்குடன் கடமை ஆற்றினால் எங்கும் வெற்றி அடைந்திடலாம்.
4. "துன்பம் தான்", "துயரம் தான்", "தோல்வி தான்" என்ற தோல்வி மனப்பான்மையுடன் கடமை ஆற்றினால் துன்பத்தினையும், துயரத்தினையும், தோல்வியினையும் மட்டும் அடைவீர்கள்.
5. இவ் மகிழ்தல் எண்ணங்களைத் தினம் தினம் மனதினில் எண்ணுவதன் மூலமாகவும், உரையாடுவதன் மூலமாகவும் வெற்றியும், சித்தியும், சிறப்பும் அடையமுடியும்.
6. நாம் எதைப்பற்றி உன்னிப்பாக எண்ணுகின்றோமோ, அதை அக்கருமத்தினை இலகுவில் அடைய முடியும்.
7. அக்கறை, சிரத்தை இல்லாமல் எக்காரியத்தை ஆற்றினாலும் அக்காரியத்தில் தோல்வி நிச்சயம்.

## பெரு"மை"க்குத் தேவையானவை.

| | | |
|---|---|---|
| உயிர்போக நேர்ந்தாலும் நீ பேச வேண்டியது | – | உண்மை |
| மற்றவருடன் பேசும்போது உன்னில் கலந்திருக்க வேண்டியது | – | இனிமை |
| வெற்றிபெற என்றும் நீ ஒழுக வேண்டியது | – | ஒற்றுமை |
| கனவிலும் நனவிலும் நீ செய்ய வேண்டியது | – | நன்மை |
| உறுதியான வாழ்விற்கு என்றும் உன்னிடம் இருக்கவேண்டியது | – | எளிமை |
| இறுதி மூச்சு உள்ளவரை நீ மீறாது இருக்கவேண்டியது | – | கடமை |
| வெற்றிக்கும் உயர்ச்சிக்கும் உன்னிடம் இருக்கவேண்டியது | – | வல்லமை |
| உன்மையே நீ சிந்தித்தறிய அடிக்கடி பெற வேண்டியது | – | தனிமை |
| காலமெல்லாம் சிறப்புடன் வாழ நீ அணிய வேண்டியது | – | பொறுமை |
| இவ்வாறு நீ ஒழுங்காகிவிட்டால் நாளை நீ பெறுவது | – | பெருமை |

# மனிதன் புனிதனாக

## காலம் பொன்னானது

உலகில் நாம் விரும்பும் அனைத்தையும் அடைவதற்கு
உதவும் மூலப்பொருள் நேரம் என்பதுதான் – ஆர்னலட் பெனட்

நேரம் பெறுமதிமிக்கது. அது வேகமாக ஓடிக்கொண்டே
இருக்கிறது. ஒவ்வொரு விநாடியும் நீ முதுமை அடைந்து
கொண்டிருக்கிறாய். நீ பிறக்கும்போதே இறப்பும் ஒட்டிக்
கொள்கிறது. உனது இழையங்கள் வளர்ந்து தேய்கின்றன.
மீண்டும் ஒருமுறை இந்த மானிடப் பிறவி உனக்கு கிட்டாது.
நீ இந்த விநாடியே வாழ்க்கைப் பயணத்தில் வெற்றி
பெற்றவனாக — புனிதனாக ஆகிவிடு.

– சுவாமி விவேகானந்தர்

கடிகாரமுள் ஒருமுள் ஓடு முன் நீ ஓடு - ஆன்றோர்

## உணவு

ஒரு நாளைக்கு ஒருவேளை சாப்பிடுபவன் – யோகி
ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிடுவன் – போகி
ஒரு நாளைக்குப் பலமுறை வயிற்றை நிரப்புபவன் – உண்மை

## சிரித்து வாழ கற்றுக்கொள்

சிரிப்பு ஒரு நோய் நிவாரணி
சூரிய ஒளி இல்லாத அண்டமும்
சிரிப்பொலி இல்லாத முண்டமும் ஒன்றே.

## விடாமுயற்சி

விடாமுயற்சி வெற்றிக்கு வழியாகும்.

## கடின உழைப்பு

கடின உழைப்பொன்று தான் ஒரு மனிதன் செய்யும் வேலைக்கு சிறந்த மூலதனம்.

**வாழ்வின் உன்னத நிலையை அடைய**

சுயமரியாதை, ஆத்ம ஞானம், சுயகட்டுப்பாடு ஆகிய மூன்றும் வாழ்வின் உன்னத நிலைக்கு இட்டுச் செல்லும்.

**காய்ந்த மரம் கனியோடு பணியும்**

பக்தி மார்க்கத்தில் செல்பவர்கள் பூமியில் அடக்கமாகவும் தெளிவாகவும் வாழ்வார்கள்.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து

- திருக்குறள்

**நிம்மதியும் மகிழ்ச்சியும் எப்போது தொடங்குகிறது?**

பேராசை எந்த இடத்தில் நிற்கிறதோ அந்த இடத்திலிருந்து தான் நிம்மதியும் மகிழ்ச்சியும் தொடங்குகிறது.

**காலன் வரவை பின்நோக்கி நகர்த்த**

காலை மாலை உலவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத்தொட்டுக் கும்பிட்டு
காலன் ஓடிப்போவானே

- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

**மனம்போல் வாழ்வாய்**

மனசை நோக்கு! அதன்
மகாத்மியங்களைப் பூரணப்படுத்து
நீ உடலால் அல்ல, மனதால்தான் மனிதன்

- இமாம் அலி

## சான்றோர் வாக்கு

| | | |
|---|---|---|
| யாதும் ஊரே யாவரும் கேளீர் | – | பூங்குன்றார் |
| ஒன்றே குலம் ஒருவனே தேவன் | – | திருமூலர் |
| வினையே ஆடவர்க்கு உயிரே | – | குறுந்தொகை |
| உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே | – | மணிமேகலை |
| அன்பே சிவம் | – | திருமூலர் |
| ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் | – | உலகி நீதி |
| கல்விக் கரையில் கற்பவர் நாள் சில | – | வள்ளலார் |
| உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் | – | திருமூலர் |
| கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் | – | நாமக்கல் கவிஞர் |

## மனிதன் மனிதனாய் வாழ!

1. நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
2. அர்த்தமில்லாமலும் தேவை இல்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விட்டுவிடுங்கள்.
3. எந்த விஷயத்திலும் பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள். விட்டுக் கொடுங்கள்
4. சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள்.
5. நீங்கள் சொன்னதே சரி. செய்ததே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள்
6. குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
7. உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
8. மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
9. அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.

10. எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

11. கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள். அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.

12. உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.

13. மற்றவர் கருத்துக்களை செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.

14. புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

15. பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைககளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.

16. மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.

17. அவ்வவப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்

18. பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன் வாருங்கள்

19. எப்போதும் எல்லோரிடத்திலும் அன்பு காட்டுங்கள்.

# மனமார்ந்த நன்றிகள்

நாம் துயருற்று இருந்த வேளையில்

நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும்,

தொலைநகல், மின்னஞ்சல்,

சமூக வலைத்தளங்கள் ஆகியவை மூலமாகவும்

எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும்,

அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,

மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும்,

இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு

அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர்,

நண்பர்களுக்கும், சகல நிகழ்வுகளிலும்

எம்முடன் கைகோர்த்து இன்றுவரை

எமக்கு சகல உதவிகளையும் செய்த

அன்பு நெஞ்சங்களுக்கும்

எமது குடும்பத்தின் சார்பாக

மனமார்ந்த நன்றிகளைத்

தெரிவித்துக்கொள்கின்றோம்.

– குடும்பத்தினர்

# வம்சாவழி

இரத்தினம்
+
அன்னம்மா
↓

* மனோன்மணி
* சபாரத்தினம்
பாக்கியலட்சுமி
புஸ்பவதி
சரஸ்வதி
சிவசுப்பிரமணியம்
* பாலசுப்பிரமணியம்
சச்சிதானந்தம்
**சிவலிங்கம்**
சண்முகராஜா
* இரவீந்திரன்

வேலுப்பிள்ளை
+
தங்கம்மா
↓

இராஜேஸ்வரி
கனேஸ்வரன்
* ஞானேஸ்வரி
இரத்தினேஸ்வரி
குகனேஸ்வரன்

சிவலிங்கம் + இரத்தினேஸ்வரி
↓

| | | | |
|---|---|---|---|
| கவிதா | பிருந்தா | ஜீவனா | மனோஜிதன் |
| + | + | + | |
| தினேஸ்குமரன் | தர்மசீலன் | விஷ்ணுவர்த்தனன் | |
| ↓ | ↓ | ↓ | |
| யக்சாயி | நவியா | ஷகானா | |
| சாயிஷா | நிவியா | ராகவி | |

* அமரர்களைக் குறிக்கும்



# கீதாசாரம்

“எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்”.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

